விலை: சதம் 60

உற்சாகமும் புத்துணர்வும்பெற
பாவியுங்கள்!
அண்ணா கோப்பி
மின்சார மேஸ்டரில்
உங்கள் முன்னிலையில்
வறுத்து அரைத்த
அண்ணா கோப்பியை
வேண்டிய அளவில்
பெற்றுக்கொள்ள
விஜயஞ்செய்யுங்கள்.
அண்ணா கோப்பிக் கடை
யாழ்ப்பாணம் - சுன்னாகம்

# ஈழநாடு
## THE EELANADU

மலர் 23 ஆனி 21 றம்ழான் 2 இதழ் 141
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 5-7-1981

சிக்கன சலவைக்கும்
பளிச்சிடும் வெண்மைக்கும் சிறந்த
மில்க்வைற் பார் சோப்பை
வாங்கி உபயோகியுங்கள்
பெரிய அளவிலும் சிறிய அளவிலும்
விற்பனையாகின்றது.
மேலுறைகளை அனுப்பி
சிறந்த பரிசில்களைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# யாழ். வன்செயல் ஜனாதிபதி கமிஷனை கூட்டணி பகிஷ்கரிக்க வேண்டும்

## தமிழ் இளைஞர் பேரவை வவுனியாவில் கூடி தீர்மானம்

(வவுனியா)

**யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற வன்செயல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் கமிஷனை தமிழர் விடுதலைக் கூட்டணி பகிஷ்கரிக்க வேண்டும்.**

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கோரும் தீர்மானம் ஒன்று வவுனியாவில் நடைபெற்ற இளைஞர்பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

வவுனியா நகரமண்டப மைதானத்தில் உண்ணாவிரதம் நடைபெற்றுக்கொண்டிருந்த அதே வேளையில் மண்டபத்தில் தமிழ் இளைஞர் பேரவைக் கூட்டம் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் 5 அம்சக் கோரிக்கையை ஆதரித்து வற்புறுத்துவது என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நடத்திவரும் பாராளுமன்ற பகிஷ்கரிப்பையும் உண்ணா விரதப்போராட்டத்தையும் ஆதரிப்பது என்றும் இது தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி எடுக்கும் எல்லா நடவடிக்கைகளையும் ஆதரித்துப் பங்கேற்பதும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் 5 அம்சக்கோரிக்கையை வென்றெடுப்பதற்கு பாடுபடுவது. அரசின் இராணுவ நடவடிக்கைகளை எதிர்த்து தமிழர் ஒற்றுமையையும் சுதந்திர உணர்வையும் வெளிப்படுத்துவது என்றும் கிராம மட்டத்தில் தொடர்ச்சியாக சாத்வீகப்போராட்டங்களை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தமிழ் இனம் தனக்கு உரித்தான சுயநிர்ணய அடிப்படை

[6ம் பக்கம பார்க்க]

## சீன வெளியுறவு அமைச்சர் இன்று நாடு திரும்புகிறார்

[கொழும்பு]

சீனவெளிநாட்டமைச்சர் திரு. குவாங்குவா இன்று காலை நாடு திரும்புகிறார்.

நேற்றுமுன் தினம் மாலை தீவுக்குச் சென்ற இவர் இன்று கொழும்பு திரும்பினார்.

இந்தியா, இலங்கை, மாலை தீவு ஆகிய நாடுகளுக்குத் தாம் மேற்கொண்ட விஜயம்வெற்றி அளித்துள்ளதாகத் திரு. குவா தெரிவித்துள்ளார். [இ]

## ஸ்ரான்லி வீதியில் கூட்டணி அலுவலகம்?

[வவுனியா]

தமிழர்விடுதலைக்கூட்டணியின் தலைமை அலுவலகத்தை ஸ்ரான்லி வீதியிலுள்ள கட்டிடத்தில் இயங்கவைப்பது குறித்து வவுனியாவில் நடைபெற்ற தமிழர் கூட்டணி செயற் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

உண்ணாவிரதம் நடைபெற்ற வவுனியா முற்றவெளியில் உள்ள பந்தலில் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கூட்டணியின் எதிர்கால நடவடிக்கை குறித்தும் ஆராயப்பட்டது. [இ]

## 1982ம் ஆண்டு வாகனப்பதிவு

[கொழும்பு]

1982ம் ஆண்டுக்கான வாகனப்பதிவு வேலைகள் ஒக்டோபர் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படும்.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் இதுபற்றித் தீர்மானித்திருக்கிறது. [து]

வங்கிகள், கைத்தொழிலாளர்களுக்கு
வங்கிக்கடனை நிறுத்தினாலும்
மகாராஜா நிதிநிறுவனம்
வழமைபோல் கைத்தொழிலாளர்களுக்கும்,
தொழிலதிபர்களுக்கும்
அடமான கடன்வசதிகளை
வழங்குகின்றது.
விபரங்களுக்கு:.........
மகாராஜா
இன்வெஸ்ட்மெண்ட் லிமிட்,
122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8267
இலங்கையில் ஆகக் கூடிய, தொழிலிட்டு
முதலிடுகளை கொண்ட நிதிநிறுவனம்.
மகாராஜா இன்வெஸ்ட்மெண்ட் லிமிட்,
54, பாங்ஷால் வீதி, கொழும்பு 11.

வவுனியா உண்ணாவிரதத்தில்

## அட்டன், அனுராதபுரம் பிரதிநிதிகள்!

(வவுனியா)

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற வன்செயல்களைக் கண்டிக்கும் முகமாக தமிழர் விடுதலைக்கூட்டணி நடத்திய உண்ணாவிரதம் நேற்று வவுனியா நகரசபை மைதானத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது.

திரு. சிவசிதம்பரம் காலை ஏழு மணியளவில் கூட்டணிக் கொடியை ஏற்றி உண்ணாவிரதத்தை ஆரம்பித்துவைத்தார். ஆரம்பத்தில் தந்தை செல்வாவினதும், அமரர் ஜி ஜி. பொன்னம்பலத்தினதும் படங்களுக்கு மலர்தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களான வி. ஆனந்தசங்கரி, ரி.சிவசிதம்பரம், சூசைதாசன், வி. தர்மலிங்கம், வி. என். நவரத்தினம், சம்பந்தன், கணேசலிங்கம், துரைரத்தினம் மற்றும் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், இளைஞர் பேரவை உறுப்பினர்களும் மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

அட்டனிலிருந்து அட்ஹாக்ஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகள், அனுராதபுரத்திலிருந்து விவசாய

(6-ம் பக்கம் பார்க்க]

### இன்று உண்ணாவிரதம்

[மன்னார்]

யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த அசம்பாவித சம்பவங்களை ஆட்சேபித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் உண்ணாவிரதம் இன்று மன்னார் முற்றவெளி மைதானத்தில் நடைபெறும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரோடு பல்வேறு சமூக இயக்கங்கள் சமய ஸ்தாபனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்தோரும் பங்கு பற்றுவர். [து]

இடமாற்றம்
"யந்திரம்ஸ்" ஸ்தாபன றீபோறிங்! றீசிலீவிங்!
கிறுங்கற்றிங்! வேலைகள்
வெலிங்டன் சந்தி, 336, மணிக்கூட்டுவீதிக்கு,
மாற்றப்பட்டுள்ளது. (0198)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பின்னுள்ள வயல்கரைத் தோட்டக்காணி 5 பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. இராசையா, 'ரதிவாசம்' கோப்பாய் தெற்கு, கோப்பாய். 0162

திருநெல்வேலி இராசபாதை வீதியில் கூட்டுறவுப் பால் பண்ணை வீதி சந்தியில் ஒன்பது பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்: ந. மகாதேவன், மகாதேவ வாசம், சைவப்பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு. 0209

கூடுதல் பயன்தரக் கூடிய நல்ல இன செவ்விளனி தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு. மில்க்வைற் யாழ்ப்பாணம். 017

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு முன்னால் அத்திபாரத்துடன் கூடிய ஆறு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: சி. அப்புத்துரை மாரிமுத்தன் கோவிலடி, மாவிட்டபுரம். 0189

தோட்டத்திலிருந்து மரம் பழங்கள் விற்பனைக்குண்டு. மனேஜர், 5, மணிக்கூண்டுக் கோபுரவீதி, யாழ்ப்பாணம். 0199

இரண்டு குதிரை வலுவுள்ள (Brook) தண்ணீரிறைக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு. நேரில் பார்த்து விலை மதிக்கவும். திரு. க. சுதாகரன், 37/12, முதலாம் ஒழுங்கை, பிறவுண் ரோடு, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 0200

3½ பரப்பு காணி மோட்டார் இணைறுடன் இரண்டு வீடுகள் கட்டப்பட்டது. கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு முன்னால் போகும் ரோட்டில் வரும் புகையிரதக் கடவைக்கு அருகாமையில் உண்டு. புகையிரத நிலையத்திலிருந்து ¼ மைல் தொலையில் உள்ளது. இ. ஐயாத்துரை, மிஷன்பாடசாலை ஒழுங்கை, குமரகோட்டம், கோண்டாவில். 0195

## விற்பனைக்கு

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் கொழும்புத்துறை வீதியில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 61, பருத்தித்துறை வீதி, கண்டிக்குளி. (0203)

மறவன்புலோவில் பெரிய நாவல் மரம் ஒன்று விற்பனைக்கு இருக்கின்றது. விபரம்: சாந்தளகம், 213, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (0220)

யாழ்ப்பாணம் வெலிங்டன் தியேட்டருக்கு அருகாமையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க, 274, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8247 (0214)

ஷார்ப் 515 டபிள் கஸெற் றேடியோ புதியது. புரோகிறாம் லொக்கேற்றர், பேடர் கொன்றோல், மூன்று கிட்டார்களுக்கும், இரண்டு மைக்றோபோன்களுக்கும் இணைக்கக் கூடியது. சுயமாக ஒலிப்பதிவு செய்யக்கூடியது. ஒரே முறையில் பல உபயோகங்களுக்குப் பாவிக்கக்கூடியது. கலியோ எலெக்ரோனிக் கைக்கடிகாரம் ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் ஒலி எழுப்புவதுடன் ஒளியையும் காட்டும், அலாரத்துடன் கூடியது. வேறு சில பொருட்களும் உண்டு. S. ஜோர்ஜ், இல; 1, மதவடி லேன், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 0225

புதிய ஸ்கூட்டர் பசாச் 83 இது 3000 K M மட்டும் ஓடியது விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டியவர் கோகிலன் மாஸ்டர் "யோபல்" செர்ச் ஒழுங்கை உடுவில். 0218

## தேவை

பகுதிநேர வேலைக்கு ஆங்கில தட்டெழுத்தாளர் தேவை. அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது. தகைமையைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். மேற்படி பதவியில் இருந்து இளைப்பாறியவர்களும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல; 0186 C/o ஈழநாடு லிமிட் யாழ்ப்பாணம். 0186

புடவை வியாபாரத்திக்கு நல்ல அனுபவமும் 5 வருட தேர்ச்சியுமுள்ள ஆண் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு: எ. நாகமுத்து அன்சன், 48-50, பெரிய கடை, யாழ்ப்பாணம். 0216

## தேவை

புடவை ஸ்தாபனத்திற்கு அனுபவம் வாய்ந்த பெண் விற்பனையாளர்கள் தேவை. நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். சிவம்ஸ், 14-ஏ. மின்சாரநிலைய வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 0185

## வகுப்புக்கள்

மின் இணைப்பு, மோட்டார் இயந்திரங்கள், மின் ஒட்டுத் தொழில் நுட்பவியல் (Electrical Wirling, Motor mechanism Electrical Welding) 4 மாத செய்முறை அறிமுறைப் பயிற்சி வகுப்புகள் 11-7-81 இல் ஆரம்பம் தங்குமிட வசதியும் உண்டு. C. E. T. யாழ்ப்பாணக் கல்வி நிலையம், (சாந்தி சினிமாவிற்கு முன்னால்) 22, இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம். [0175]

## காணவில்லை

V. P. சிவராசா அவர்களின் வளர்ப்பு மகன் இராமகிருஷ்ணனை 17-6-81 முதல் காணவில்லை. 5 அடி 2 அங் உயரமும் சுருள்தலைமயிரும் உடையவரை கண்டுபிடித்துத் தந்தாலும், நேரில் தகவல் தந்தாலும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். V. P. சிவராசா, "இராஜேஸ்வரி வாசம்", திருநெல்வேலி தெற்கு. 0187

## வாடகைக்கு

இல 51/1 கன்னிமார் வீதி அரியாலை மேற்கு யாழ்ப்பாணத்தில் தனியான கிணறு மின்சாரவசதி ஆகியவற்றுடன் கூடிய நான்கு படுக்கை அறைகள் கொண்ட விலாசமான வீடு வாடகைக்கு விடப்படும். வீட்டின் பிற்பகுதி சிறுகைத்தொழில் நிலையமாகவோ ஸ்ரோராகவோ உபயோகிக்க முடியும். தொடர்பு கொள்க ச. தேவகுணராசா 211, ஆசீர்வாதம்பர் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். 0180

## கல்வி

ஆறு கிழமைகளில் மின்சார தொழில் கற்கலாம் Jaffa Technical School (பதிவு 1956-ம் ஆண்டு) 53 (30) டேவிட் வீதி, குருநகர், யாழ்ப்பாணம். 0210

## பயிற்சி

புதிய குளிருட்டல் பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாகின்றன. விண்ணப்பங்கள் 10-7-81க்கு முன்னர் கிடைத்தல் வேண்டும். அதிபர், ஐ. ஏ. ஆர். 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [0173]

## சாலை முகாமையாளர் இல்லை

(தெல்லிப்பழை)

வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள பருத்தித்துறை இ. போ. ச. சாலை, கடந்த ஒரு மாதத்திற்கு மேலாகச் சாலை முகாமையாளர் ஒருவர் இல்லாத நிலையிலுள்ளது. இச்சாலையில் முகாமையாளராகப் பணியாற்றிய திரு வி ஸ்ரீஸ்கந்தராசா பதவி உயர்வுடன் இடமாற்றலாகிச் சென்ற பின்பு, இப்பதவி வெற்றிடமாயினும் இதுவரை இப்பதவிக்குப் புதியவர் எவரும் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையால் நியமிக்கப்படவில்லை எனத் தெரிய வருகின்றது.

## சாரணர் விழா

[மட்டுவில்]

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிமண்டபத்தில் இளிநொச்சி மாவட்ட சாரணர் இயக்கத்தின் சாரணர் விழா இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

நுழைவாயில், பாலங்கள், பாசறை அமைப்பு, மைதானக்காட்சி, உபகரணமின்றி சமையல் செய்தல், தேநீர் சிற்றுண்டிகள், குளிர்பானம், ஐஸ்கிறீம் ஆகிய அம்சங்கள் இடம்பெறும்.


சிங்கப்பூரில் வேலை தேடுபவர்களுக்கு

**G. P. T. டிரவல்ஸ் அறிவித்தல்**

எமது தொடர்பு நிறுவனமான செட்டடி ஜேம்ஸ் டிரவல்ஸ் சேவிசஸ் நிறுவனத்தின் மூலம் நம்பிக்கையுடன் விரைவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்

பெண்கள்- வயது: 20 → 30

ஆண்கள்- வயது: 21 — 40 ஆங்கில அறிவுடையவர்

(0215)



வெளிநாடு செல்பவர்களுக்கு

**விசேட அறிவித்தல்**

இந்தியா, இத்தாலி, சிங்கப்பூர், ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு உயர்கல்வி, தொழில் நிமித்தம் செல்பவர்களுக்கு சகலவிதமான ஏற்பாடுகளையும், (அரசாங்க சட்டதிட்டங்கள் உட்பட) குறைந்த விமானக்கட்டண டிக்கட்டுகளுடன் ஒழுங்கு செய்து தரப்படும்

KUMAR FREIGHT & TRAVEL LANKA Ltd,
307, Cotta Road, Colombo 3. Phone 26946

[0217]


## பிஸ்கால் விற்பனை

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

1 நீக்கிலாஸ் சின்னப்புவும் பெண்
2 ஞானப்புவும், இருவரும் முதலாம் குறுக்குத்தெரு, பாசையூர், யாழ்ப்பாணம்.

வழக்காளிகள்

வழக்கு இலக்கம்; காணி/2588

விரோதமாக

கபிரியேல் கைம்பெண் அந்தோனியாப்பிள்ளை, செபஸ்தியான் வீதி, பாசையூர், யாழ்ப்பாணம்.

எதிராளி

மேற்சொல்லப்பட்ட எதிராளியிடமிருந்து வெலியாற்றிக விபரிக்கப்பட்ட தொகைப்பணம் ரூபா யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற செலவு 1233-07 சதமும், சுப்பிரீம் கோட்டுச் செலவு ரூபா 251-50 சதமும், பிஸ்கால் செலவும், வட்டியும் அறவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1981-ம் ஆண்டு ஆவணி மாதம் 05-ந் திகதி காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்திலிருந்து பகிரங்க ஏலத்தில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலால் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கிறேன்.

**விற்பனை செய்யப்படும் ஆதன டாப்பு**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி கண்டிக்குளி கோவிற்பற்று பாசையூர் இறை "விளாங்குளி" நில. பர 1. 1/4லும் வீடும், குகினியும், கிணறும், வான்பயிர், செய்பயிர்களும் இதற்கு எல்லைகள்: கிழக்கும் தெற்கும் றோட்டு, வடக்கு; ஞானப்பு யோண்பிள்ளைக்கும் விக்ரோறிய ரவுக்குமுரியாதனம், மேற்கு; டெனிஸ் பெண் மரியம்மா விற்குரியாதனம்.

தா. குலஞானம்,
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(0219)

## முன்னாள் கோப்பாய் எம். பி.க்கு சிலை

(பச்சிலைப்பள்ளி)

முன்னாள் கோப்பாய் எம். பி. அமரர் சி. கதிரவேற்பிள்ளையின் மார்பளவான சிலை ஒன்று நிறுவப்படவுள்ளது.

இச்சிலையினை இலங்கை அறவழிப்போராட்டக் குழுவினர் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இச்சிலை யாழ் பஸ் நிலையத்திற்கண்மையில் நிறுவப்படும். அத்துடன் கதிரவேற்பிள்ளையின் வாழ்க்கை வரலாறுபற்றிய நூல் ஒன்றினையும் அறவழிப் போராட்டக் குழுவினர் வெளியிடவுள்ளனர். அமரர் கதிரவேற்பிள்ளை அறவழிப் போராட்டக் குழுவின் ஸ்தாபகரில் ஒருவராவார்.

## வில்லுக்கத்தியால் வாலிபரைக் குத்தினர்களாம்

(புலோலி)

வில்லுக்கத்தியால் ஒரு வாலிபரைக் குத்திக் காயம் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இரு வாலிபர்கள் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

சரவெட்டி கல்பொல்லையைச் சேர்ந்த சந்திரன் இந்திரன் என்பவரை அதேயிடத்தைச் சேர்ந்த மாணிக்கம் செல்வரத்தினம், சந்திரன் நவேந்திரன் ஆகிய இருவரும் வில்லுக்கத்தியால் குத்திக் காயம் விளைவித்தனராம்.

பருத்தித்துறைப் பொலிசார் இச்சம்பவம் தொடர்பான இரு வாலிபர்களையும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே எஸ் மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்த போது நீதவான் இருவரையும் றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 8ம் திகதி உயர் வகுப்பு மாணவர்களுக்கிடையில் "2000 வருடத்தில் மக்கள் அனைவருக்கும் சுகவாழ்வு" என்னும் பொருள்பற்றி கட்டுரைப் போட்டி ஒன்று நடாத்தப்படவிருக்கிறது.

சரசாலைப்பகுதி சுகாதாரப் பரிசோதகர் திரு ஆர் எல் சேவியர், வித்தியாலய அதிபர் ஆகியோர் இணைந்து இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார்கள் (இ)

## வருடாந்த உற்சவம்

[பச்சிலைப்பள்ளி]

முள்ளியான் புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் முதலாம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

தினமும் மாலை திருப்பலிப் பூசை நடைபெறும். 7-ம் திகதி இரவு நற்கருணை ஆராதனை நடைபெற்று 8-ம் திகதி காலை திருச்சருப பவனியுடன் உற்சவம் முடிவடையும்.

## மணிவாசகர் குருபூசை

[யாழ்ப்பாணம்]

மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையையொட்டி யாழ். திருமுறை மன்றத்தின் சார்பில திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பூசையும் நால்வர் திருவுருவம் பொறித்த பிரசுர வெளியீட்டு வைபவமும் அதனைத் தொடர்ந்து மன்ற மாணவ மாணவிகளின் திருவாசக பாராயணமும் இடம்பெறும்.

# அவர் - ஒரு தத்துவம்

"இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்" என்று பாடிய மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசைத்தினமாகிய இன்று அமரர் சி. வ. உ. சோமசேகரம் அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் நடைபெறுவது சாலப்பொருத்தம்.



பலபருவங்களில் பலவித தோற்றங்களைக் கொண்ட சைவப்பெரியார் சோமசேகரம் சுற்றில் ஒரு தத்துவத்தின் வடிவாகத் தறவிவடிவத்தில் நடமாடியதை நாமறிவோம்.

அமரர் 21 வருடங்களுக்கு முன் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியின் பொன் விழாவுக்கு அமரர் சோமசேகரம் M. A. (Lond) வழங்கிய ஆசியுரை அவருடைய ஆளுமையை என்றும் விளக்கும்.

"காலம் தனது தேவைக்காக ஒரு புத்தனை, ஒரு விவேகானந்தனை, ஒரு பாரதியை, ஒரு காந்தியை அழைத்து நமக்கு அறிமுகப்படுத்தியது.

அந்நிய ஆட்சியில் எங்கள் மதம், மொழி, கல்வி தாக்குண்ட நிலையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தோன்றி தம் பணியைச் சிறப்பாகச் செய்து விட்டு மறைந்தார்.

ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை உணர்ந்த அம்மானின் அநுக்கிரகத்தால் யாழ்ப்பாண இந்துக்கல்லூரி உதயமானது. இன்று பல சைவக்கல்லூரிகள் அமைந்திருக்கின்றன. இம் மகாஜன இவற்றுள் முன்னணி வகிக்கிறது.

ஆனால் காலமாற்றத்தில் தாம் இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் எமது மாணவர்களை மனிதராகத் தயாராக்கும் பணியில் இறங்கவேண்டாமா? இதுவே அமரர் சோமசேகரத்தின் உள்ளக் கொதிப்பாக இருந்தது.

இந்துதர்மத்தின் ஆழமான அகமான பலதிறப்பட்ட உட்பொருளை ஆராய்ந்த பெரியார் "எக்காலக் கல்விக்கும், எக்கால மக்கள் உய்யும் வழிக்கும் ஏதுகாண வல்லது இந்துதர்மமும் அதன் மரபும்" என்று அடிக்கடி வற்புறுத்திவந்தார். அவ்வழியில் உத்வேகத்துடன் செயலாற்றினார். நாடு முழுவதிலும் அவருடைய சேவை பரந்திருந்தது.

பாடசாலைகளை அரசு சுவீகரித்தபோதும் கல்விமுறையில் புரட்சிகர மாற்றங்கள் கொண்டுவந்தபோதும், தமிழ் மாணவர்களுக்கு தொடக்கத்திலிருந்து கல்லூரிவரை தமிழே பயிற்றுமொழியாக இருக்கவேண்டுமென வற்புறுத்தினவர் அந்நாள் வடமாநில முதற் கல்வியதிபதி.

ஆங்கிலத்தில் அறிவியல் பயின்றவர்களெல்லாம் தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெறவேண்டுமென்றும் தமிழில் பட்டப்படிப்புப் பெற்றவர்கள் ஆங்கிலத்தைக் கற்க வேண்டும். இவ்வாறு இருவகைப் பட்டதாரிகளும் பயின்று தமிழில் அறிவியல் நூல்களை நிறைய எழுதவேண்டுமெனக் குரலெழுப்பினார்.

தத்துவத்தின் உருவெடுத்த மனிதர்களை எல்லோரும் செவ்வனே புரிவதில்லை. அது உலகம் கண்ட உண்மை. வெகுஜன விரோதம் வியப்பல்ல!

"பிறந்ததுவே சேவைக்கென பெற்றியோரும் தரும்முறை சோமசேகரன், ஓயவாறுணர்ந்தொழுகிய உண்மைத் தொண்டன்" பாதிமதிவேணி வணி ஈசன் பாதபங்கயத்தில் சாந்திபெற பிரார்த்திப்போமாக!

க. கிருஷ்ணபிள்ளை

## நயினைப்பதியாளே!

இராகம் : கல்யாணி தாளம் : ஆதி

பல்லவி

நயினைப் பதியாளே நாகேஸ்வரித் தாயே
நவசக்தி உமை அம்பா நாதவடிவம் நீயே (நயினை)

அனுபல்லவி

கயிலை நாதர் பங்கில் கலைவன் யாவின் முதல்வி
கருணைக் கடலாகி அன்பின் வாயில் அமர்ந்தாய் (நயினை)

சரணம்

தூரம் தாங்கி வந்தேன் உன் துணையை நாடி நின்றேன்—என்
குறைகள் எல்லாம் அகற்றிக்குணங்கள் அருளும் அன்னாய்
மயிலின் ஆடல் கண்டும் மணியின் ஓசை கேட்டும்
குயிலின் கீதம் உணர்ந்தும் பயிலும் பாடல் புனைந்தேன் (நயினை)

சங்கீதபூஷணம் விசு. பரமலிங்கம்

(இன்று மணிவாசகப் பெருமானின் குருபூசை அதனை முன்னிட்டு இக்கருத்துரை வெளிவருகின்றது)

# தமிழ்த் தலைமகன்

(உயர்திரு. கலாநிதி சு. நடேசபிள்ளை B. A. BL)

தலைமகனுக்கு அருத்தக்கவனது இலக்கணம் யாது? மணிவாசகப்பெருமான் திருக்கோவையாரின் இறுதிச் செய்யுளில் தலைமகன் இலக்கணம் கூறுகின்றார். அது வருமாறு:-

காரணி கற்பகங்கற்றவர்
நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தாமணி
அணிதில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன்
தக்கோர் தம் சங்க
நிதிவிதிசேர்
ஊருணி உற்றவர்கூரன்
மற்றியாவர்க்கும்
ஊதியமே

இதன் பொருள்:

அவன் மேகத்தைப் போன்றவன். வேண்டாது கொடுப்பவன், ஆதலின் கற்றோருக்கு உசாத்துணையானவன்; கல்விச் செல்வம் படைத்தோன் ஆதலின்; இசை, நாடக விற்பன்னருக்கு சுற்றம் போன்றவன், கலையுணர்ச்சியால் அவரினின்று தன்னைப் பிரித்துக் கருதாதவன் ஆதலின்; சீர்பொருந்திய சிந்தாமணி போன்றவன்; நினைத்தவற்றை அளிப்போன் ஆதலின்; நிதியைப்போன்றவன்; நட்பினருக்கும் பகைவருக்கும் பயனளிப்போன் ஆதலின்; ஊரிலுள்ள நீருற்றைப் போன்றவன், தலையடைந்தவர்களுக்குத் தண்ணளி செய்பவன் ஆதலின்; இவ்வாறு அவன் யாவர்க்கும் நன்மையைத்தருபவன் ஆவான்!

(காரைநகர் மணிவாசகசபை விழாமலர்)

# நூல்நிலையத்துக்கு

## லியோகழகம் உதவும்

(அரியாலை)

வன்செயலினால் முற்றாக எரிந்து அழிக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையத்தைத் திரும்பவும் புனரமைப்புச் செய்யும் முயற்சிக்குக் கைகொடுத்துதவ யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி லியோ கழகம் முன்வந்துள்ளது.

கல்லூரி அதிபர் திரு. செ. ச. ஆனந்தராஜனின் அனுசரணையுடன் கல்லூரியின் கல்விகற்கும் மாணவர்களிடையேயும், நண்பர்களிடையேயும் பெருந்தொகையான புத்தகங்களைச் சேகரித்து நூல்நிலையத்திற்கு வழங்க லியோ கழகம் முயற்சிசெய்துவருகிறது.

மாணவர்களிடையே சேகரிக்கப்பட்ட புத்தகங்களின் ஒரு பகுதியைக் கல்லூரியின் சார்பில் யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதனிடம் கையளிக்க ஏற்பாடு செய்துவருகிறது.

# இரவல் வாங்கிய சங்கிலியை திருப்பிக்கொடுக்கவில்லையாம்

## இளம்பெண்ணுக்கு ரூ.10 ஆயிரம்பிணை

[புலோலி]

இரவல் வாங்கிய தங்கச்சங்கிலியைத் திருப்பிக் கொடுக்காது மோசடிசெய்துவந்ததாகக் கூறப்படும் இளம்பெண் ஒருவரை 10,000 ரூபா பிணையில் செல்லுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

துன்னாலையைச் சேர்ந்த திரவியநாயகம் நவமணி என்பவர் தன்னிடம் அதே இடத்தைச் சேர்ந்த துரைராசா ஜெயராணி என்பவர் 8800 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி ஒன்றை இரவல்வாங்கியதாகவும், பின்னர் அச்சங்கிலியைத் திருப்பித்தராதுமோசடிசெய்து வருவதாகவும் பருத்தித்துறை பொலிஸில் புகார் செய்திருந்தார்.

பொலிசார் விசாரணையின் பின்னர் ஜெயராணியைக் கைதுசெய்து பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். சுகேசன்முன்னிலையில் ஆஜர்செய்தபோது நீதிவான் சந்தேகநபரை 10 000 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

## தனிநாயகம் அடிகள் நினைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சபை மன்னார்-மாந்தை- முருங்கன் கிளைகள், தவத்திரு தனிநாயக அடிகளார் நினைவு விழாவை இம்மாதம் 11ம் திகதி கொண்டாடவுள்ளன. (மா)

## சேவைக்கால பயிற்சி

(நெல்லியடி)

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் வர்த்தக பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்புகளை, வடமாநில கல்வித் திணைக்களம் ஒழுங்கு செய்துள்ளது. இப் பயிற்சி வகுப்புகளில் ஆசிரியர்கள் கலந்துகொண்டு பயன்பெறவேண்டுமென வடமாநில கல்வியதிபதி திரு. க. சிவநாதன் கோரியுள்ளார்.

உடுப்பிட்டி, பருத்தித்துறை, கோப்பாய், சாவகச்சேரி ஆகிய கல்வி வட்டாரங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இம்மாதம் 17ம் திகதி அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் பயிற்சி வகுப்பு நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களுக்கு கடமை லீவு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தண்ணீர் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தபால் அலுவலகத்தில் தண்ணீர்க் கஷ்டம் ஏற்பட்டுள்ளதால் இரவு பணியாற்றும் ஊழியர்கள் அவதியுறுகின்றனராம்.

அங்குள்ள கிணற்றில் நீர் வற்றியுள்ளதனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாம். (இ)

## கிறிஸ்தவ இளைஞர் சங்கக் கிளை

(மன்னார்)

மன்னார் புனித மரியன்னை ஆலய வளவில் அமைந்துள்ள பணிமனையில் மன்னார் கிறிஸ்தவ இளைஞர் சங்க கிளை காரியாலயம் ஒன்று இம்மாதம் 12ம் திகதி திறந்து வைக்கப்படும்.

காரியாலயத்தை மன்னார் அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளருமான திரு. சமிலஸ் பெர்னாண்டோ திறந்து வைப்பார்.

## வன்னியர் நினைவுச் சின்னம்

(நெல்லியடி)

கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கத்தின் ஞாபகார்த்தமாக, கலியங்காட்டில் அமைக்கப்பட்டுவரும் வன்னியசிங்கம் ஞாபகார்த்த மணிமண்டப வேலைகள் பூர்த்தியாகும் நிலையிலுள்ளன.

கலியங்காடு பொதுச் சந்தையின் தென்புறமாக அமைக்கப்பட்டுவரும் இம்மண்டபத்தை அமைப்பதற்கான நிதியினை, கோப்பாய்த் தொகுதியின் முன்னாள் எம். பி. அமரர் கதிரவேற்பிள்ளை பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்திருந்தார்.

## ஐஸ் தட்டுப்பாட்டை நீக்க முயற்சி

[மன்னார்]

மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஐஸ் தட்டுப்பாட்டை நீக்கவென மூதூர் எம். பியும், மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்றூப் பல நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டுள்ளார்.

மன்னார் மாவட்டத்திலுள்ள ஐஸ் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு அபுதாபி அரசின் உதவியுடன் மன்னார் மீன்பிடி துறைமுகத்தில் நிறுவப்பட்டு வரும் ஐஸ் தொழிற்சாலை பேசாலை, தலைமன்னார் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டு வரும் ஐஸ் தொழிற்சாலை என்பனவற்றின் வேலைகள் துரிதமாக்கப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்களும் வந்து சேர்ந்துள்ளன.

## உலக வங்கியின் புதிய தலைவர்

வாஷிங்டன், ஜூலை. 4

உலக வங்கியின் புதிய தலைவராக திரு. ஏ. டபிள்யூ. குளோசென் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து பதவியேற்றுள்ளார். முன்னாள் அமெரிக்க வங்கியின் தலைவரான இவருக்கு வயது 65. (த)

## மீனவர் வீடமைப்பு

(மன்னார்)

எருக்கலம் பிட்டியில் மீனவர் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 50 வீடுகளை அமைப்பதற்கென தனிப்பட்ட நபர்களின் காணிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

தோட்ட வெளியில் சுய வீடமைப்புத் திட்டத்தின்கீழ் பல வீடுகள் நிறுவப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை மூதூர் எம். பி.யும், மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்றூப் மேற்கொண்டு வருகிறார்.

## ரமழான் நற்சிந்தனை

நிச்சயமாக புனித ரமழானின் இரவு பகலில் அல்லாஹ்விடம் கைதிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள். மேலும் ஒவ்வொரு முஸ்லிமிற்கும் ஒவ்வொரு நாளும் இரவு பகலில் ஒரு துஆ அங்கீகரிக்கப்படுகிறது.

உதயம் : 5-59 ஸஹர் முடிவு : 4-25

மௌலவியா. பௌஸியா கரீம்

உரிமை இழந்த மக்களின்

# நம்பிக்கை அடையாளமாக அமெரிக்கா விளங்குகிறது

## றீகன் சுதந்திரதினச் செய்தி

வாஷிங்டன், ஜுன் 4 அடக்குமுறை அரசாங்கங்களால் உரிமைகள் பறிக்கப்பட்ட பல லட்சம் மக்களுக்குரிய சுதந்திரத்தினதும் நம்பிக்கையினதும் அடையாளமாக அமெரிக்கா விளங்குகிறது.

இவ்வாறு ஜனாதிபதி றீகன் ஜுலை 4-ம் தேதி கொண்டாடப்பட்ட அமெரிக்காவின் சுதந்திரதினத்தை முன்னிட்டு விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனாதிபதி றீகன் செய்தியில் தனிநபரின் சுதந்திரத்திலும் மேன்மையிலும் நாம் கொண்டுள்ள நம்பிக்கையால் அமெரிக்க ஜனநாயகம் தனிச்சிறப்புப் பெற்று விளங்குகிறது. நமது நாட்டின் மூலாதார ஆவணமான சுதந்திரப் பிரகடனத்தில் இதன் சாரம் தெளிவாகப் புலப்படுகிறது.

அந்த உன்னத பிரகடனம் எழுதப்பட்டுச் சில வருடங்கள் சென்றபின் தோமஸ் ஜெபர்ஸன் அதைப் பற்றிக் குறிப்பிடுகையில் "அமெரிக்க மனப்பாங்கின் வெளிப்பாடாக அது விளங்கவேண்டும் எனக் கருதப்பட்டது" என்றார். உண்மையில் இருநூறு வருடங்களுக்கு மேல் கழிந்த பின்னரும் அதில் அடங்கியுள்ள தத்துவங்கள் அமெரிக்க மக்கள் முழுமையாகப் பின்பற்றும் ஒரு கோட்பாட்டைப் பிரதிபலிக்கின்றன.

தனிநபரின்பால் நாம் கொண்டுள்ள தனித்துவமான நம்பிக்கை தான் அமெரிக்காவின் அபிவிருத்தியின் தோற்றுவாயாக இருந்துள்ளது. தனிநபரின் சுதந்திரத்தில் நாம் வைத்துள்ள நிலையான பக்தி காரணமாக அடக்குமுறை அரசாங்கங்களாலும் சர்வாதிகார அமைப்புகளாலும் உரிமைகள் பறிக்கப்பட்ட பல லட்சம் மக்களுக்குரிய சுதந்திரத்தினதும் நம்பிக்கையினதும் இன்னமாக அமெரிக்கா விளங்குகிறது.

நாம் நமது சுதந்திரத்தை எண்ணிக் களிகூரும் அதே வேளையில் நமது குடியரசின் ஆரம்ப காலம் முதல் "அமெரிக்கா மனப்பாங்கை" பிரதிபலித்த நம்பிக்கையுடன் நாம் வருங்காலத்தை எதிர்நோக்குகிறோம். அதாவது அமெரிக்காவை மேன்மை மிக்க பாதையில் இட்டுச் சென்ற உணர்வுடன் நாம் வருங்காலத்தை எதிர்நோக்குகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

பயங்கர ஆயுதங்களுடன்

# முகமூடி கோஷ்டி இரவில் கொள்ளை

(ஸ்கந்தபுரம்)

துப்பாக்கி, கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் முகமூடி அணிந்த நால்வர் கோஷ்டி வீடொன்றினுள் புகுந்து, அங்கிருந்தவர்களைப் பயமுறுத்திவிட்டு, 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இத்துணிகரக் கொள்ளை கோட்டைகட்டினகுளம் அம்பலப்பெருமாளில் நடைபெற்றுள்ளது.

இக்கொள்ளை தொடர்பாக திருமதி பாலலிங்கம் ஸ்ரீரஜனி என்பவர் கிளிநொச்சிப் பொலிஸில் புகார் செய்துள்ளார். அப்புகாரில் கூறப்பட்டுள்ளதாவது:

சம்பவதினம் இரவு பக்கத்து வீட்டுப் பெண் ஒருவரும், நானும் நித்திரை செய்தோம். சுமார் 12 மணியளவில் முகமூடி அணிந்த 4 பேர் துவக்கு, கத்தி, பொல்லு போன்ற ஆயுதங்களுடன் எமது வீட்டிற்குள் புகுந்தனர்.

ஒருவர் எனது வாயையும், தொண்டையையும் நசித்துப் பிடித்தபடி இருந்தார். மற்றொருவர் என்னிடமிருந்த திறப்பைப் பறித்தெடுத்தார். பின் வீட்டுக் கதவுகள் திறக்கப்பட்டு, தங்க நகைகள், உடுபிடவைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் ஆகியவற்றைக் கொள்ளையடித்தனர். எவருமே உள்ளே புகமுடியாதவாறு ஒருவர் துவக்குடன் வெளியே காவலிருந்தார்.

என்னைப் பிடித்திருந்தவர் என்னைச் சத்தம்போடவிடாது அமர்த்திப் பிடித்திருந்தார். நான் சத்தம் போட்டால் கொலை செய்துவிடுவதாகவும் பயமுறுத்தினர். அதன் பின் எல்லோரும் கொள்ளையடித்த பொருட்களுடன் தலைமறைவாகிவிட்டனர்.

கிளிநொச்சிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கிருஷ்ணராசா, உதவி இன்ஸ்பெக்டர் திரு கே ஏ பிரேமதாசா, சார்ஜன்ட் திரு இ திருவிளங்கம் ஆகியோர் மேற்படி கொள்ளை சம்பந்தமாகப் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

### முத்துமாரி அம்பாள் மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலய புனராவர்த்தன சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேகம் எதிர் வரும் புதன்கிழமை 8-7-81, நடைபெறவுள்ளது.

பரந்தன் லொறிக்கொள்ளை;

# இரு சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

பரந்தன் லொறிக்கொள்ளை சம்பந்தமாக கிளிநொச்சி நீதிமன்றத்தில் நடந்த அடையாள அணிவகுப்பில் சந்தேக நபர் இருவர் அடையாளம் காட்டப்பட்டனர். ஒருவர் எவராலும் அடையாளம் காட்டப்படவில்லை.

பரந்தன் சந்தியில் கடந்த மாதம் 1 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான லொறியை கொள்ளையடித்தது தொடர்பான அடையாள அணிவகுப்பு கிளிநொச்சி நீதிமன்றத்தில் பதில் நீதவான் டபிள்யூ கார்த்திகேசு முன்னிலையில் நடைபெற்றது.

இக்கொள்ளையின் போது சாரதியின் கைக்கடிகாரமும் 5 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் முகமூடி அணிந்த நபர்களால் கொள்ளையடிக்கப்பட்டது.

கொள்ளையடிக்கப்பட்ட லொறி மறுதினம் குமரபுரத்தில் குடைசாய்ந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

சந்தேக நபர்களான பரந்தன் ரசாயனக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த எட்வின் தனராசா அல்லது சயிரஸ் ராஜன் குமரபுரத்தைச் சேர்ந்த கோவிந்தசாமி தயாபரன் அல்லது ரமணன் விமன் கமத்தைச் சேர்ந்த அனுராரதஞயக்கா அலது சுகுமல்லி ஆகியோர் முடிமறைக்கப்பட்ட வாகனத்தில் நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டு அடையாள அணிவகுப்பில் இடம் பெற்றனர்.

இவர்களை கிளிநொச்சி சார்ஜன்ட் எஸ். குணரத்தினம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி கைது செய்திருந்தது.

அடையாள அணிவகுப்பில் சந்தேகநபர்களான சயிரஸ் ராஜன் ரமணன் ஆகிய இருவரும் சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்டனர். மற்றொரு சந்தேக நபரான சுகுமல்லியை எவரும் அடையாளம் காணவில்லை.

சந்தேக நபர்கள் மூவரும் இம்மாதம் 14-ம் தேதிவரை றிமாண்டில் வைக்கப்படவுள்ளனர். (கொ)

# வயோதிப மாதை மானபங்கம் செய்தனராம்

(புலோலி)

வயோதிப மாதின் கொண்டையைப் பிடித்துத் தாக்கி மானபங்கப்படுத்திய இரு இளைஞரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் திரு கே. எஸ் மகேசன் உத்தரவிட்டார்.

கரவெட்டி கன்பொல்லையைச் சேர்ந்த தங்கராசா இலக்கொழுந்து என்பவரின் கொண்டையைப் பிடித்துத் தாக்கி மானபங்கப் படுத்தினர்களென பருத்தித்துறைப் பொலிசார் கன்பொல்லையைச் சேர்ந்த இந்திரன் சந்திரன், குமரேச கிருஷ்ணமூர்த்தி ஆகிய இரு இளைஞர்களையும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே எஸ் மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

நீதவான் இரு இளைஞர்களையும் இம்மாதம் 9ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.


மயிர்க்கொட்டி உங்கள் பயிர்களைத்தாக்குமுன் அதனைத் தாக்குங்கள்




லன்னேற் எல் கூட்டுறவுக்கடைகள், லங்கெம் விவசாய சேவை நிலையங்கள் ஆகியவற்றிற் கிடைக்கும்.

யூ. எஸ் ஏ. டெலவெயார், வில்மிங்டன், ஈ. ஐ. டு பொன்ட் டீ நேமர்ஸ் அன்ட் கம்பனி (இன்கோர்பரேட்டட்) நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட ® வர்த்தக அடையாளம்

450 மி. லி. – ரூ. 68/-



யாழ். நகரில் மலிவு விலையில் பொருட்கள்..

- பேப்பர் வகைகள்
- மின்சார பொருட்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- வீட்டுப் பாவனைப் பொருட்கள்

நியூஸ் பிரின்ட் பேப்பர் பேங் பேப்பர் (இறக்குமதி, உள்ளூர் செய்யப்பட்டது)

பேங் பேப்பர் கலர்.

வைட் பிரின்டிங் (22 1/2x35) (20x30) (D/C)

TISSUE (ரிசு) (வெள்ளை பல வர்ணங்களில்)

GREPE PAPER (பச்சை, சிகட்புடன், 10 வர்ணங்களில்)

பிறவுண்பேப்பர் டைப்பிங் பேப்பர்

கடித உறைகள் (பல அளவுகளில்

பிளாஸ்டிக் குரோசரி பேக்ஸ் & (WEDDING BAGS)

மின்சார அலங்காரப் பொருட்கள்
மின் விசிறிகள்
மின் அலங்காரப் பென்டன்கள்
இஸ்திரிப் பெட்டிகள்
டோர்ச் லைட்டுகள்
பொக்கட் றேடியோக்கள்
செசட் றேடியோக்கள்

இன்னும் பல பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றிட

அம்பலவாணர் அன் சன்ஸ்
196 கே. கே. எஸ் வீதி,
(கடைத்தெரு பிள்ளையார் கோயில் எதிரில்)
யாழ்ப்பாணம்

தொலைபேசி: 8291 தந்தி: 'வாணர்சன்ஸ்'

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
அரசிளங்குமரி

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
எங்க பாட்டன் சொத்து

வெலிங்டன் (யாழ்நகர்)
10-30, 2-30 6-00, 9-30
ரஜனிகாந்த் - லதா
ஆயிரம் ஜென்மங்கள்

லிடோ யாழ். நகர்
10 30, 2-30, 6-00, 9-30
அழியாத கோலங்கள்
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

தினசரி 4 காட்சிகள்
வின்சர் (யாழ்ப்பாணம்)
ஜெமினி, பத்மினி, ஜெயலலிதா, சுருளிராஜன், எஸ். வி. சுப்பையா
ஆதி பராசக்தி
(கலர்—புதிய பிரதி)

வெற்றிநடைபோடும் 50-வது வெற்றித்திருநாளை நோக்கி !
சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி, விஜயா
தர்மராஜா (கலர்)

கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி ★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ மௌகார்ஜுனி
சத்யாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

மனோகரா தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ்ப்பாணம்)
சிவாஜி - மாலினி பொன்சேகா - ஸ்ரீதேவி நடித்த
பைலட் பிரேம்நாத்
10-7-81 முதல்
ஒரு கை ஓசை

புரட்சி நடிகரை திரையில் காணத்துடிக்கும் எம். ஜி. ஆர். ரசிகர்களின் ஆவலைப் பூர்த்திசெய்ய இதோ!
ராணி 10-30, 2-15, 6-00, 9-30
(யாழ்.நகர்)
எம் ஜி ஆர். ஜெயலலிதா
எங்கள் தங்கம்
[புத்தம் புதிய பிரதி—கலர்]

FINAL WEEK
RAJAH Jaffna Daily 10-30, 2-00, 4-30 7-00 and 9-30



Smashing 2nd Glorious Week
40,000 Patrons have seen within one week
See it TODAY
THE BIG BOSS
(Scope and Color)
Adults only வயதுவந்தவர்களுக்கு மட்டும்

விஸ்வமடு கொலைவழக்கு:

# சந்தேக நபர்கள் 4 பேருக்கு பிணை
## ஒருவர் தொடர்ந்து றிமாண்டில்

[விசுவமடு]

விசுவமடு கொலைவழக்கில் சந்தேகநபர்கள் நால்வர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒருவரின் பிணை மறுக்கப்பட்டுள்ளது.

விசுவமடு தொட்டியடியைச் சேர்ந்த சந்தையா குலசிங்கம் என்பவரைக் கொலைசெய்ததாக அதே இடத்தைச்சேர்ந்த கணேசமூர்த்தி அல்லது சந்திரன், செல்லத்துரை சிவரத்தினம், முருகேசு சிவஞானசுந்தரம், சண்முகம் குகதாசன், எஸ். முருகையா ஆகிய ஐவரும் கிளிநொச்சிப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்களுக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி. ஜெயசோதி முன்னிலையில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி திரு. எஸ், தம்பிரத்தினம் ஆஜரானார்.

பொலிஸ் தரப்பில் கிளிநொச்சி உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு வி தம்பாபிள்ளை, சார்ஜன்ட் திரு எஸ் குணரத்தினம் ஆகியோர் ஆஜராகினர்.

சட்டத்தரணி திரு எஸ் தம்பிரத்தினம் சந்தேகநபர் ஐவரையும் பிணையில்செல்ல அனுமதிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

சந்தேகநபர்களான எஸ் சிவரத்தினம், எம் சிவஞானசுந்தரம், எஸ் குகதாசன், எஸ் முருகையா ஆகியோரை பிணையில் செல்ல அனுமதித்த நீதவான், கணேசமூர்த்தியைத் தொடர்ந்தும் றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். (கொ)

# "நாம் விடுத்திருப்பது மிக சாதாரண கோரிக்கைகளே!"
## மட்டக்களப்பில் வவனியா எம். பி.

(மண்முனை)

தமிழ் ஈழக் கோரிக்கை தவறு என எவ்வளவு விரைவில் இந்த அரசாங்கம் சட்டத்தைக் கொண்டுவருகிறதோ. அவ்வளவு விரைவில் இந்த நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளையும் நாம் நிரப்புவோம். எமது வேகம் காணாது என கூறும் தம்பிமார்களுக்கெல்லாம் அப்போது வேலை கொடுப்போம். எமது வேகத்தையும், இளைஞர்களின் வேகத்தையும் இணைத்து அரசுக்கு எமது எதிர்ப்பைக் காட்டுவோம்.

இவ்வாறு மட்டக்களப்பு எவபர் மைதானத்தில் நடந்த உண்ணாவிரதத்தை தொடர்ந்து உரையாற்றிய வவனியா பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

நாம் முன்வைத்த கோரிக்கை அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாத மிகப் பெரிய கோரிக்கைகள் அல்ல. மிகச்சாதாரண கோரிக்கைகளே. இவைகளை அரசு தட்டிக்கழிக்கப்படும்போது பாராளுமன்றம் எமக்கு முக்கியமா? அல்லது பதவிகள் தான் தேவையா?

பொறுப்புமிக்க இரு அமைச்சர்கள் யாழ்/சுபாஸ் விடுதியில் நகரைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது தேர்தல் கடமைக்கு வந்த 1700 ஆயுதப் படையினர் அட்டூழியங்களைப் புரிந்தனர். புனித யாழ்நகரை மயான பூமியாக்கினர். இவை திட்டமிட்டு செய்யப்பட்டவை, சாதாரண பொலிசார் செய்த காரியமல்ல. 'ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயம், யாழ். பொது நூல்நிலையம், யாழ். எம். பியின் வீடு இவைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட அழிவு சாதாரண பொலிசாரால் செய்யப்பட்ட காரியமா? இல்லை.

தமிழ்மக்களின் செய்திகளை வெளியிடும் பத்திரிகைக்கு தீ! தமிழ் மக்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவும் நூல் நிலையத்திற்கு தீ! தமிழ்மக்களின் நலனையே தமது நோக்காகக் கொண்ட எம். பியின் வீட்டுக்குத் தீ! இவை தானா இந்த அரசாங்கம் தமிழ்மக்களுக்குதரும் சலுகை; உரிமை? இதற்கு ஏற்ற விசாரணையைத்தான் நாம் கோருகிறோம். இந்த அட்டூழியங்களைச் செய்த ஆட்சியாளர்களை நீதிபதிகளாக நாம் ஏற்கத் தயாராக இல்லை. எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் முறையாக வகுக்கப்பட்ட திட்டத்தை நாம் உங்கள் முன் வைப்போம்"

பட்டிருப்பு எம் பி கணேசலிங்கம், மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் சி சம்பந்தமூர்த்தி, ஆ சௌந்தரநாயகம், உடுப்பிட்டி எம் பி இராசலிங்கம், திருமலை ஜனுப் மரூப், திருமலை இரா சம்பந்தன், காசி ஆனந்தன், பொன் வேணுதாஸ் ஆகியோரும் உரையாற்றினர்.

யாழ். நூலகத்தை மீண்டும்

# கட்ட வேண்டியது
## தமிழ்மக்கள் பொறுப்பு!
### -கூட்டணித் தலைவர்

(யாழ்ப்பாணம்)

பல ஆண்டுகளாக பாடுபட்டு சேமித்து வைத்த புத்தகங்கள் தீக்கிரையாகி விட்டன. அரசு உதவி செய்தாலென்ன செய்யாவிட்டாலென்ன அரசு நஷ்டஈடு வழங்கினாலென்ன நூல் நிலையத்தை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டியது தமிழ் மக்களின் பொறுப்பாகும்.

கூட்டணித்தலைவரும் நல்லூர் எம் பி யுமான திரு எம். சிவசிதம்பரம் யாழ். நகரில் தற்காலிக நூல்நிலைய திறப்புவிழாவில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது அறிவை தெய்வமாக மதிப்பவர்கள் நீங்கள் சரஸ்வதியை வணங்கும் பரம்பரையினர் நாம் எங்கள் தெய்வங்களை அழிக்க இடம் கொடுக்க மாட்டோம்.

நடந்த சம்பவங்கள் எதையும் மறக்கலாம், ஆனால் நூல்நிலையம் எரித்த சம்பவத்தை சந்ததிசந்ததியாக நாம் மறக்க முடியாது. எம் வாழ்நாளிலும் எமக்கு பின் சந்ததியினரும் அதனை மறக்க மாட்டார்கள்.

ஆலயங்கள், சங்கங்கள், மன்றங்கள் புத்தகப்பிரசுரிப்பாளர்கள் நூல்நிலையத்தை கட்டிஎழுப்ப தங்களால் இயன்ற உதவி புரியுமாறு வேண்டுகோள் விடுகிறேன்.

இது எமது பணி கடமை இதனை செய்து முடிப்போம் எங்கெல்லாம் தமிழ் மக்கள் வாழ்கின்றார்களோ அங்கிருந்தெல்லாம் உதவி வந்துசேர வேண்டும்

இனிமேல் பேசிப்பயனில்லை கடந்த காலமெல்லாம் பேசிவிட்டோம் இனி செயலில் இறங்குவோம் செயல்படாவிட்டால் நாம் எதையுமே பாதுகாக்க முடியாது தனிப்பட்ட இழப்புகளை நாம் தாங்கி கொள்ளலாம் ஆனால் நூல்நிலைய இழப்பை தாங்க மாட்டோம் மீண்டும் கட்டி எழுப்பியே தீருவோம் (ச)

## பாடப்புத்தகம் விநியோகம்

[மட்டுவில்]

கல்வி இலாகாவின் இலவச பாடப்புத்தக விநியோகத்திட்டத்தின்கீழ் முன்பு விநியோகம் செய்தும், அப்பொழுது விநியோகம் செய்யப்படாதிருந்த ஏனைய பாடப்புத்தகங்களை சாவகச்சேரி கல்வி வட்டாரத்தில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு சி இ நடராஜா தலைமையில இப்பொழுது விநியோகம் செய்யப்படவுள்ளது.

இந்த இலவசப் பாடப்புத்தக விநியோகத்திற்கெனசுமார் 14 ஆயிரம் பாடப்புத்தகங்கள் இன்று வந்து சேர்ந்துள்ளன, எதிர்வரும் தவணைப்பரீட்சைக்கு முன்பு இந்தப் பாடப்புத்தகங்கள் விநியோகம் செய்து முடிக்கப்படும்,

(மட்டுவில்)

மன்னார் மாவட்டத்தில் புதிய மேற்றிராணியாராக அதி வந் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவு செய்யப்பட்டார் அவருக்கான மேற்றிராணியார் பட்டாபிஷேகம் இம்மாதம் 30 ம் திகதி புனித மடு திருப்பதியில் நடைபெறும்

யாழ்ப்பாண மறைமாவட்ட மேற்றிராணியார் அதி வந். கலநிதி பீ தியோகுப்பிள்ளை ஆண்டகை புதிய மன்னார் மறைமாவட்ட மேற்றிராணியாரின் பட்டாபிஷேக விழா ஒழுங்குகளுக்கானகுழு ஒன்றை நியமித்துள்ளார் அக்குழுவில் குருக்கள். துறவியர், பொது நிலையினர் ஆகியோர் அடங்குவர் இக்குழு விரைவில் புனித மடு திருப்பதியில் கூடி வேண்டிய ஒழுங்குகளைச் செய்யும்

ஆகஸ்ட் மாதம் 2ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை புதிய மேற்றிராணியார் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் சமய ரீதியாகத் தமது புதிய மேற்றிராணியார் பதவியின் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்.

ஹரன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு சுஜாதா
சென்ற ஆண்டு சிறந்த நடிகை சரிதா நடித்த
சென்ற ஆண்டின் சிறந்த டைரக்டர்
K. பாலசந்தரின் நூல் வேலி (கலர்)

யாழ். நகரில்
கொழும்பு விலைகளுக்கமைய

இரும்புக்கம்பிகள்,
3/8, 5/8, 1/2''
கூரைத்தகடுகள், நீர்இறைக்கும்
மோட்டர்கள்

பெருநாடுங்கள்
நேரடி இறக்குமதியாளர்

கதிர் ஹாட்வெயர்ஸ்

11/1-2 மொம்சாக் பில்டிங்
ஸ்ரான்லி வீதி, - யாழ்ப்பாணம்

## நூல் உதவும் திட்டம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றியம், ''வீட்டுக்கு ஒரு நூல் வாங்கி'' யாழ் மாநகரசபை நூலகத் தின் வளர்ச்சிக்கு உதவும் திட் டத்தை நேற்று முதல் ஆரம் பித்துள்ளது.

இத்திட்டத்தை முதலில் யாழ்ப்பாணம் விவேகானந்தா அச்சக முதல்வர் 52 புதிய நூல்களை வழங்கி ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து இப் பணி கிராமமட்டத்தில் விஸ்த ரிக்கப்படும். [கெ]

## மணிவாசகர் குருபூசை

[யாழ்ப்பாணம்]

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்தி கழகத் தின் ஆதரவில் இன்று பிற் பகல் மாணிக்கவாசகர் குரு பூசை மேற்படி ஆலயத்தில் நடைபெறுகிறது.

மாணிக்கவாசகர் ஊர்வலம், பஜனை என்பனவற்றுடன் கலாநிதி நா. கனகரத்தினத் தின் ''திருவாசகம் என்னும் தேன்'' என்ற பொருள் பற் றிய உரையும், இரவு சதுர் த்தி உற்சவமும் நடைபெறும். [இ]

இதமான சொகுசான
சவாரிக்கு

HERO

சைக்கிள்கள் தாராளமாகக்
கிடைக்கின்றன.

நகர விலைகளிலும் குறைவு

பல்கன் ஏஜென்சி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
போன்: 685

## உணர்வுகள் எரிவதில்லை! [3]

'பேனு' எழுதுவது

பின்புறமாக மேல்மாடிக் குச் செல்கிறேன்.

அறைகள், மேசைகள், நாற் காலிகள், தட்டிகள், அலுமாரி கள், புத்தகக்கட்டுகள், தட் டெழுத்துப் பொறிகள், டெலிபோன்கள் எல்லாம் எங்கே! மேல்மாடிக் கூரையும் எரிந்து இடிந்து விழுந்து கிடக் கின்றன. கண்ணாடிகள் உருகி ஊற்றுண்டு கிடக்கின்றன.

மேல்மாடி வாசலில் இருந்த யோக சுவாமியின் படத்தைக் காணோம். அதற்குச் சற்றுத் தூரத்தில் மாட்டப்பட்டிருந்த அமரர் டாக்டர் சண்முகரத்தி னத்தின் படமும் இல்லை. பொதுமுகாமையாளர் அறை யில் மாட்டப்பட்டிருந்த இலக் கண சுவாமிகளின் பெரிய அள விலான படமும் எரிந்து போய் விட்டது. அண்மையில்தான் இலக்கண சுவாமிகளின் குரு பூசை இங்கு கொண்டாடப் பட்டது. நினைவுக்கு வருகின் றது.

### பெரியவரின் அபிலாஷை

'ஈழநாடு' பத்தாவது ஆண்டு விழா கொண்டாடப் பட்டபோது யாழ். திறந்த வெளியரங்கில் நடந்த கலை ஞருக்கு பங்களிப்பு வழங்குவது பற்றியும் கூட ஆலோசிப்பதா கக் கூறினார்.

வடக்கில் யாழ்ப்பாணத்தில் 'ஈழநாடு' வருவது போல் கிழக்கு மாகாணத்திலிருந்தும் மலை நாட்டிலிருந்தும் கூட தமிழ்ப்பத்திரிகைகளை வெளி யிடுவதற்கு தாம் ஆவல் கொண்டிருப்பதை வெளியிட் டார்.

'ஈழநாடு' லாபம் சம்பாதிக் கும் ஒரு ஸ்தாபனமாக இல்லா விட்டாலும் மக்களுக்கு சிறந்த சேவையாற்றவேண்டும் என் பது அவரது அபிலாஷையாக விருந்தது.

தமிழ்ப்பிரதேச நிலைமைகளை யும் மக்களின் அபிலாஷைகளை யும் பிரதிபலிக்கும் விதத்தில் ஆங்கிலத்தில் மாத்திரமின்றி சிங்களத்திலும் கூட பத்திரிகை களை வெளியிடுவது பற்றி அவர் கருத்துக்கொண்டிருந் தார்.

1959ம் ஆண்டு 'ஈழநாடு' முதல் இதழில் அதன் நோக்க மும் - கொள்கையும் பற்றியும் எழுதுகையில் திரு. தங்க ராஜா குறிப்பிட்டிருந்த கருத்தை இங்கு சுட்டிக்காட்டு வது பொருத்தமாய் இருக்கும். அக்கட்டுரையில் அவர் குறிப்

## ஸ்தாபனத் தலைவரின் அபிலாஷைகள்

விழாவில் வடபகுதியிலுள்ள பல்வேறு கலைஞர்களும் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளை நடத் தினார்கள். ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் விழாவில் கலந்து கொண்டார்கள். தமிழ்நாட்டி லிருந்து யாழ்ப்பாணம் வந்த கலைஞர் ரி. எஸ். பகவதி - குன் றக்குடி அடிகளார் போன்ற வர்கள் எமது காரியாலயத் துக்கு வருகைதந்து வாழ்த்தி னார்கள்.

இலக்கிய ஆர்வலர்களுக்காக பிரமாண்டமான முறையில் இலக்கியபோட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்கினோம்.

அந்த காலகட்டத்தில் 'ஈழ நாடு' தலைவர் திரு. கே. சி. தங்கராஜா அவர்கள் ஈழநாடு ஊழியர்கள் மத்தியில் இதே மாடியில் இருந்து உரைநிகழ்த் தினார்.

பல இன்னல்களுக்கிடையில் ஸ்தாபனம் எல்லாரது ஒத்து ழைப்புடனும் சிறப்பாக நடை பெற்றுவருவதை அவர்பாராட் டினார்.

ஸ்தாபனத்தில் ஊழியர்க

பிட்ட கருத்துக்கள் இன்றுகூட எமக்கும் பொருத்தமாய் இருப் பதை காணலாம். அது வரு மாறு:

ஈழநாடு இலங்கையின் வர லாற்றில் மிக முக்கியமான தொரு கட்டத்திலே தோன்றி யுள்ளது. சிக்கல்கள் மிகுந் துள்ள இன்றைய நிலையில் எத் திக்கை நோக்கிச் செல்ல வேண்டுமெனத் தெரியாது. தமிழ் பேசும் மக்கள் திகைத்து நிற்கின்றனர். இவ்வேளையில் உண்மை தெய்வீகமானது. கருத்துரைகள் கட்டுப்பாடற் றவை என்ற பத்திரிகாதர் மத்தை இலக்காகக்கொண்டு உள்ளதை உள்ளவாறு எடுத்து ரைக்கவும் கருத்துரைகளைப் பரிமாறிக்கொள்ளவும் 'ஈழ நாடு' உதயமாகியுள்ளது.

தமிழ்மக்களிடையே நிலவி வரும் பலதரப்பட்ட கருத்துக் களுக்கு ஓர் அரங்கமாக உதவுவதற்கும் தெளிவாகச் சிந்தித்து நிலைமைகளை நன்கு ஆராய்வதற்குமாகவே 'இவ் வார இதழ் வெளிவருகின்றது. இத்தகையதொரு வெளியீடு மக்களுக்கு அவசியமென்பதில் கருத்துவேற்றுமைக்கு இடமே யில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மலைநாட்டி லும் வாழும் தமிழ்பேசும் மக் கள் தங்குதடையின்றித் தங் கள் உளப்பாங்கை வெளியிடு வதற்கு இன்று ஒரு பத்திரிகை அவசியமென்பதை இலங்கை வாழ் தமிழ்மக்களின் எதிர்கால நல்வாழ்வில் அக்கறையுள்ள அனை வரும் ஒப்புக்கொள்வர். இந்த அவசிய தேவையை நிறைவேற் றுவதற்காகவே மிகுந்த இன் னல்களுக்கிடையில் 'ஈழநாடு' ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங் கைத் தமிழர் அனைவருக்கும் பொதுவான பத்திரிகை இல்லை யென்றே கூறவேண்டும். ஒரு சில பத்திரிகைகள் உளவாயி னும் அவற்றுட் சில அரசியல் கட்சி சார்புடையனவாகும் வேறு சில சமயப்பற்றுள்ளன வாகவும் பணியாற்றிவருகின் றன.

ஈழவளநாட்டிலே பல சமூ கத்தினர் இருக்கின்றார்களெனி னும் தமிழரின் சொந்தப்பண் பாட்டினையும், உரிமைகளையும் எடுத்துரைக்கும்போது பிற சமூகத்தினரும் இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர் என் பதை உணர்ந்து, வேற்றுமை யில் ஒற்றுமைகாண முயல வேண்டும். ஒற்றையாட்சி நில வும் இந்நாட்டில் மனித உரி மைகளைப் பெறுவது சாத்திய மானதா? அடிப்படை உரிமை கள் அனைத்தும் நன்று பாது காக்கப்படுமா? அன்றேல் சமஷ்டிதான் இலங்கைக்கு உகந்ததா? மாகாண சுயாட்சி முறை எமது தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றத் தக்கதா? இவை போன்ற கேள் விகளுக்கு விளக்கம் தரும் கருத் தரங்கமாக 'ஈழநாடு' விளங் கும்.

தமிழர் பொருளாதாரம் தமிழினத்தின் பொருளாதார நிலை இன்று மிக மோசமாகிக் கொண்டுவருகிறது. தமிழ் மக் கள் அரசாங்க சேவையை நம்பி வாழுங்காலம் மீண்டும் வரப்போவதில்லை. உத்தியோ கப்பதவிகள் சம்பந்தமான தேர்வுகளில் அரசாங்கம் பார பட்சமின்றி நடந்தாலுங்கூட இன்றைய நிலையிற் போதிய உத்தியோகங்கள் கிடைக்கு மென நாம் எதிர்பாக்கவே முடியாது. இந்நிலையிலே புத்த கம் புதியதுறைகளை ஆராய்ந்து நமது பொருளாதார நிலை யைச் சீராக்க வழிவகைகளைத் தேட வேண்டும். தலைமுறை தலைமுறையாகத் தமிழர் வாழ்ந்து வந்த பகுதிகளிற் பொருளாதாரச் சீரமைப்புக் கான புதிய பணிகளை நாம் மேற்கொள்ளவேண்டும். அதனை விடுத்துப் பொருளா தார விருத்திபற்றி வெற்றுரை பேசித் திரிவதிற் பயன் எதுவு மில்லை.

(நாளை தொடரும்)

## கந்தபுராண சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் மயிலணைக்கந்த சுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தில் தினமும் இரவு திரு. வ. குகசர்மா கந்தபுரா ணம்பற்றிச் சொற்பொழிவாற் றிவருகிறார்.

இம்மாதம் 7ம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த் தோற்சவம் நடைபெறுவது டன் உற்சவம் முடிவடையும். [இ]

## அட்டன்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி)

சம்மேளனப் பிரதிநிதிகள் ஜனதா விமுக்தி சங்கமயவைச் சேர்ந்த பட்றிக் பெர் ணாண்டோ, யோகன் தேவரா ஜன், கண்டியிலிருந்து மேர்ஜ் நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்ட னர். ஏராளமான பெண்களும் கலந்து கொண்டனர்.

பாரதியாரின் காணி நிலம் வேண்டும் போன்ற எழுச்சிப் பாடல்களையும், சகல சமயங் களினதும் பிரார்த்தனைக் கீதங் களையும் பாடினார்கள்.

சர்வதேச விசாரணைக் குழு வேண்டும். யாழ். அனர்த்தங் களுக்குக் காரணமானவர் களைத் தண்டிக்கவும், பாதிக் கப்பட்டோருக்கு நஷ்டஈடு கொடு போன்ற சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகளும் காணப்பட்டன.

உண்ணாவிரதத்தில் ஆயிரத் துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். அசம் பாவித சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத் தப்பட்டிருந்தது.

## ஜனாதிபதி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யில் அழிவதிலிருந்து தம்மை காப்பாற்றிக்கொள்ள சகலநடவடிக்கைகளையும் எடுக் கப்பேரவை கடமைப்பட்டிருக் கின்றது எனக்கூறும் ஒரு தீர் மானமும் நிறைவேற்றப்பட் டது.

1981மே 31ம் திகதிதொடக் கம் ஜூன் 3ம் திகதிவரையில் அரசின் ஆயுதப்படைகளினால் படுகொலைசெய்யப்பட்ட பர மேஸ்வரன், பாலசோதி போன்ற அனைவரது மரணங் கள் குறித்தும் கூட்டத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட் டது.

ஜனாதிபதி நியமிக்கும் விசார ணைக்குழுவையும் பகிஷ்கரிக் கும்படி தமிழர் விடுதலைக்கூட் டணியைக் கோருவதென்றும் இதுவரை தமிழ் இளைஞர் பேரவை எடுத்துள்ள எல்லா நடவடிக்கைகளையும் அங்கீகரிப் பதென்றும் இத்தீர்மானங் களைச்செயற்படுத்தும் பொறு ப்பை பேரவையின் தலைமைக் குழுவிடம் ஒப்படைப்பதென் றும் முடிவுசெய்யப்பட்டது.

## சணல் கூட்டுத்தாபன புதியதலைவர்

[கொழும்பு]

சணல் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக திரு. பந்து மனுகுல சூரிய நியமிக்கப்பட் டுள்ளார். [து]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

கொழும்பு-கிழக்குபெர்லின்
விமான மூலம்

சென்று திரும்ப - ரூபா- 17,000/- (Net)
மீளச்செலுத்துதல் (ஒருவழி) ரூபா-7,500/- (Net)
உத்தரவாதம்

ட்ரவல் விங்ஸ்லிமிட்டெட்
இல.11, ரம்யா ரோட், கொழும்பு-4
தொலைபேசி: 85839, 22122
0221

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி இராசமணியம்

உடுவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி இராச மணியம் காலமானார். அன்னார் இராசமணியத்தின் (B. F. O., புளியங்குளம்) அன்பு மனைவியும், அன்னப் பிள்ளை, தெய்வானைப்பிள்ளை (ஆசிரியை இராமநாதன் கல்லூரி), சோதிப்பிள்ளை (ஆசிரியை உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை), தருமரத்தினம் ஆகியோரின் சகோதரியும், சின்னத்துரை செல்லையா [இளைப்பாறிய ஆசிரியர்], மகேஸ்வரி] நெசவுத் தொழிற்சாலை, இளவாலை] ஆகியோரின் மைத்துனி யும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று [5-7-81] ஞாயிற்றுக்கிழமை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப் படும்.

0231

விற்பனைக்கு

ELF 150 HIGH ROOF 15 ஆசன மினிபஸ் விற்பனைக் குண்டு. கடன் வசதி செய்து தரப்படும். வித்யா மோட் டோர்ஸ், 68 ஸ்ரான்லி வீதி R G. பில்டிங் யாழ்ப்பாணம். தொலைபேசி: 7255 0226

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 5-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office SriLanka
Regd No. QB 100286/81 P. O. Box 49, Jaffna. தற்காலிக தொலைபேசி: 7707